# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2112/32 - 2019 පෙබරවාරි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.28

*2112/32 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

**பாராட்டுச் சேவைப் பதக்கம்**

*நலம் பெறுக !*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் அரசின் தலைவரும், நிறைவேற்றுத் துறையின் மற்றும் அரசாங்கத்தின் தலைவரும் படைதாங்கு சேவைகள் பிரதானியுமான மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், அனைவருக்கும் நல்லாசியுடன் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்போருக்கும் மற்றும் ஏனைய நபர்களினதும் சேவையைப் பாராட்டுமுகமாக பாராட்டுச் சேவைப் பதக்கமொன்றினை வழங்குதல் எனது ஆவலானதினால்,

அப்பணியைக் கட்டுப்படுத்துவதற்காக இதனகத்துப் பின்னர் மீறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டியதும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தற்போது என்னால் இவ்வாறு ஆக்கப்பட்டு விதிக்கப்பட்டு தாபிக்கப்படுகின்றது.

முதலாவது : குறியீட்டுப் பெயர் மற்றும் அறிமுகம்.- இந்தப் பதக்கம் "பாராட்டுச் சேவைப் பதக்கம்" எனக் குறிக்கப்பட வேண்டும் என விதிக்கப்படுகிறது.


1A - G 29554 — 42 (2019/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*இரண்டாவது* : *விபரம்.*- இந்தப் பதக்கமானது தங்க நிற உலோகத்தினால் 3.7 செ. மீ. விட்டத்துடன் எட்டு இதழ்களைக் கொண்டு ஒரு தாமரை மலர் வடிவத்திற்கமைய உருவாக்கப்பட வேண்டிய இந்தப் பதக்கத்தின் முன்பக்கத்தில் நடுவில் இலங்கைத் தரைப்படையைப் பிரதிபலிக்கின்ற நுணிகள் மேல் நோக்கி ஒன்றுக்கொன்று குறுக்காக உள்ள இரண்டு வாள்களின் மேல் இலங்கைக் கடற்படையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நங்கூரமொன்றில் அதனைச் சுற்றி சங்கிலி ஒன்றைச் சுற்றியுள்ள விதத்தில் மேல்நோக்கி உயர்ந்து இருக்கின்ற அதன் மேல் இலங்கை வான்படையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலையை இடது பக்கம் திருப்பிக் கொண்டு பறக்கும் பருந்து ஒன்றையும், அதனைச் சுற்றி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழிகளால் பாராட்டுச் சேவை எனும் வாசகத்தைச் செதுக்கிக் காட்டுதல் வேண்டும். பின்புறத்தின், தாமரை மலர் இதழ்களையுடைய கரையால் சூழப்பட்ட இலங்கையின் பரம்பரைக்குரிய சின்னமான சிங்கத்தின் உருவத்தையும், அதனைச் சுற்றிச் செல்லும் நெற்கதிர் அலங்காரத்தினால் மற்றும் உச்சியில் இருக்கும் தர்மசக்கரத்தினாலும், அடியில் நிறைகுடத்தினாலும், நிறைகுடத்திற்கு வலது பக்கத்தில் ஒளிக் கதிர் வீசும் சூரியனையும் இடது பக்கத்தில் சந்திரனையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சின்னத்தையும், அதன் கீழ் தாபிக்கப்பட்ட வருடமான 2009 உம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

*மூன்றாவது* : நாடாவின் நீளம் 5 செ. மீ. உம், அகலம் 3.1 செ. மீ. உம் ஆகக் காணப்படுவதோடு, அதன் வலது மற்றும் இடது பக்கங்களில் முறையே 0.8 செ. மீ. அளவையுடைய இளநீல மற்றும் பிரகாசமான கடுநீல நிறத்தையுடைய இரண்டு கோடுகளையும், நடுவில் 1.5 செ. மீ. கடும் செம்மஞ்சள் நிறக் கோடுகளையும் கொண்டதான நிரலொன்றாக இருக்க வேண்டியதோடு அந்த நாடா தொங்கவிடப்படக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பதக்கத்தை இடது மார்பில் அணிய வேண்டும் என விதிக்கப்படுகிறது.

*நான்காவது* : *தகைமைகள்.*- 2009.05.19 ஆந் திகதியிலிருந்து போருக்குப் பிந்திய செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஆரம்பப் பயிற்சிக் கால எல்லை தவிர்ந்த ஆறு வருடங்களுக்குக் குறையாத எண்ணிக்கையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நடத்தை மற்றும் இருப்பைக் கவனத்திற் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளில் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளில் அனைத்துப் பதவிகளை வகிப்பவர்களுக்கும் படைதாங்கு சேவைகளில் ஆறு வருட சேவைக் காலத்தையுடைய நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும், இதனகத்துப் பின்னர் ஆக்கப்பட்டுக் காட்டப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த அணிவிப்பு வழங்கப்பட வேண்டும் என விவரிக்கப்படுகின்றது.

*ஐந்தாவது* : *பதிவுசெய்தல்.*- அதியுத்தமராம் சனாதிபதியின் அங்கீகாரத்தின் பின் பதக்கம் வழங்கப்பட்டிருக்கும் அனைவர்களினதும் பெயர்கள், சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடப்பட வேண்டும் எனவும் உரிய படைதாங்கு சேவைப் பிரதானிகளின் கட்டளைக்கு அமைய அவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பேணப்பட வேண்டும் எனவும் விதிக்கப்படுகின்றது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாக அவ்வாறான பெயர்ப்பட்டியல் ஒன்றை பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின் கீழ் பேணப்பட வேண்டும் எனவும் கட்டளையிடப்படுகிறது.

*ஆறாவது* : *அணியும் ஒழுங்கு முறைகள்.*- பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்கு முறை காட்டப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி படைதாங்கு சேவைகளில் நீடிப்புச் சேவைப் பதக்கத்திற்குப் பின் பராராட்டுச் சேவைப் பதக்கத்தை அணிய வேண்டும் என கட்டளையிடப்படுகிறது.

*ஏழாவது* : *குறுகிய வடிவம்.*- பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும், சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்றதுமான சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு, வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் அரைவாசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை சேவைத் தலைமையகங்களில் வைத்திருத்தல் வேண்டும் என கட்டளையிடப்படுகின்றது.

*எட்டாவது* : *உரித்தை இழக்கச் செய்தல் மற்றும் மீள உரித்தாக்குதல்.*- இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் கீழ் எவரேனுமொரு நபருக்கு அளிக்கப்பட்டுள்ள பதக்கமொன்றை இரத்துச்செய்து நிராகரிப்பதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கும் இயலும் எனவும் இருந்தும் அவ்வாறு உரித்தளிக்கப்பட்ட அளிப்பொன்றை மீண்டும் செல்லுபடியாக்கி வழங்குவதற்கும், அவர்களுக்கு சட்டபூர்வமான அதிகாரம் உள்ளதாகவும் விதிக்கப்படுகின்றது. இரத்துச் செய்யும் அல்லது மீள வழங்கும் அறிவிப்பை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட சேவை நியதிகளில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

*ஒன்பதாவது : நடைமுறைப்படுத்தப்படும் திகதி.- இந்தப் பதக்கம் 2009, மே மாதம் 19 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகிறது.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி கொழும்பு, சனாதிபதி மாளிகையில் வெளியிடப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*உதய ஆர். செனெவிரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

**பாராட்டுச் சேவைப் பதக்கம்**

*சனாதிபதி அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு விளக்கமாக பாராட்டு சேவைப் பதக்கமளிப்பதற்கு உரித்தை இழக்கச் செய்வதற்கு, மீண்டும் உரித்தளிப்பதற்கு அது தொடர்பான ஏனைய விடயங்களுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*உதய ஆர். செனெவிரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2019, பெப்புருவரி 21.*

**பாராட்டுச் சேவைப் பதக்கம்**

*1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி முதல் போருக்குப் பின்னரான செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் நடத்தை மற்றும் இருப்பைப் பற்றி திருப்தியடைகின்றவர்களும், இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி வரை செலுாக்கத்துடன் சேவையில் ஈடுபட்டிருந்த மற்றும் அதற்குப் பின்பு சேவையில் சேர்ந்த தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தவர்களும் ஆரம்ப பயிற்சிப் பாடநெறியைத் தவிர ஆறு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றவர்களுமான எந்தவொரு பதவிக்குரிய நபரொருவரைப் போன்று ஆயுதப் படையணிகளில் ஆறு வருட சேவைக் காலமுடைய நிரந்தர சிவில் ஊழியர்களும், பாராட்டுச் சேவைப் பதக்கம் பெற்றுக்கொள்வதற்குத் தகைமையுடையவர்களாவார்கள்.*

*2. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி தொடக்கம் ஆறு வருடங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது சேவையிலிருந்து விலகிச் சென்றவர்கள் இப்பதக்கத்துக்கு உரித்தற்றவர்களாவர்.*

*3. இறந்தவரொருவருக்காக வழங்கப்படும் பதக்கத்தை அவரது சட்டபூர்வமான நெருங்கிய உறவினர் அல்லது அவ் உறவினரால் பெயரிடப்பட்ட நபரொருவர் பெற்றுக்கொள்ளலாம்.*

*4. பாராட்டுச் சேவைப் பக்கத்தை வழங்குவதற்காக செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் படைத் தளபதியினால் பெயரிடப்படும் மூன்று பேருக்குக் குறையாத எண்ணிக்கையைக் கொண்ட குழுவினால் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அக்குழுவினால் செய்யப்படும் பரிந்துரைகளை குறித்த படைத் தளபதியின் பரிந்துரைகளுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்தல் வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாக செய்யப்படும் பரிந்துரைகள் கட்டாயமாக பாதுகாப்புச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

*5. ஒவ்வொரு பரிந்துரையுடன் பரிந்துரைக்கப்பட்ட நபரது இலக்கம், பதவி, பெயர் மற்றும் முழுப்பெயர் உட்பட ஏனைய அனைத்து விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.*

6. பதக்கம் பெற்றவர்களின் பெயர்கள் உரிய சேவை நியதிகளில் வெளியிடப்படல் வேண்டும். அப்பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப் பதிவேடொன்றைக் குறித்த படைத் தளபதியின் கட்டளையின்கீழ் பேணப்படுதல் வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தொடர்பாக அவ்வாறான பெயர்ப் பதிவேடொன்றைப் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின்கீழ் பேணப்படுதல் வேண்டும்.

7. இப்பதக்கம் பெற்றிருப்பவர் ஒருவர் இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கமைய அல்லது வேறு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய மரண தண்டனைக்கு ஆளானால் அப்போது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளையிடாவிட்டால் அப்பதக்கம் அவருக்கு உரித்தாகாது.

8. சேவைகளிலிருந்து விலக்கப்படுபவர்கள் மற்றும் நீக்கப்படுபவர்கள் அல்லது அதிகார சபையிலிருந்து விலக்குவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தாகாது.

9. அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திக்கு உள்ளாகி சேவைகளிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடும் வரை அவருக்கு வழங்கப்பட்ட பதக்கம் உரித்தாகாது.

10. இப்பதக்கத்தைப் பெற்றிருப்பவர், தேசத் துரோகம், நாட்டுப் பிளவு, கிளர்ச்சி, கோழைத்தனம், சேவையிலிருந்து விலகுதல் அல்லது இயற்கைக்கு மாறான நடத்தை போன்ற குற்றங்களுக்கு குற்றவாளியாக இருந்தால் அல்லது துர்நடத்தை காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டு அல்லது விலக்கப்பட்டு சேவை நியதியின் கீழ் இருக்கும் போது சிவில் அதிகாரிகளினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அப்போது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தாகாது.

11. எந்தவொரு நபருக்கும் உரித்தளித்த பதக்கம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் தனது தற்றுணிவின்படி மீண்டும் உரித்தாக்கி வழங்கப்படலாம்.

12. உரித்தளித்தல் அல்லது மீண்டும் உரித்தாக்கி வழங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது பற்றிய அறிவித்தல் சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும்.

13. காணாமற் போன பதக்கத்திற்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பீர்களாயின், அவ்வாறு காணாமற் போன பதக்கம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வேண்டும். அது எந்த நிலையில் காணாமல் போனது என்பது பற்றி சமாதான நீதவானினால் உறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்றைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டோடு தன் கட்டளையிடும் அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவரால் அது கடித பரிவர்த்தனைகள் செய்யப்படும் சாதாரண வழி மூலம் குறித்த படைத் தளபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பதக்கம் காணாமல் போனது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நியாயமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டால், காணாமற் போன பதக்கத்துக்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

14. இவ் ஒழுங்குவிதிமுறைகளில்,

| | | |
|---|---|---|
| (அ) "சேவைகள்" என்பதில் | - | இலங்கைத் தரைப்படை<br>இலங்கைக் கடற்படை<br>இலங்கை விமானப்படை |
| (ஆ) "சேவைத் தளபதிகள்" என்பதில் | - | இராணுவத் தளபதி,<br>கடற்படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி |
| (இ) "இராணுவ உறுப்பினர்" என்பதில் | - | இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை உறுப்பினர்கள் |
| (ஈ) "சிவில் ஊழியர்கள்" என்பதில் | - | இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளிலுள்ள சிவில் ஊழியர்கள் |
| (உ) "தரைப்படை" என்பதில் | - | இலங்கைத் தரைப்படையும் |
| (ஊ) "கடற்படை" என்பதில் | - | இலங்கைக் கடற்படையும் |
| (எ) "விமானப்படை" என்பதில் | - | இலங்கை விமானப்படையும் |

உள்ளடங்குகின்றன.

03-772/1

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன.

**சேவைப் பதக்கம்**

*நலம் பெறுக !*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் அரசின் தலைவரும், நிறைவேற்றுத் துறையின் மற்றும் அரசாங்கத்தின் தலைவரும் படைதாங்கு சேவைகளின் பிரதானியுமான மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், அனைவருக்கும் நல்லாசியுடன் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் அனைத்துப் பதவிகளை வகிப்போருக்கும் மற்றும் ஏனைய நபர்களுக்கும் சேவையைப் பாராட்டி சேவைப் பதக்கமொன்றினை வழங்குதல், எனது ஆவலானதினால்,*

*அப்பணியைக் கட்டுப்படுத்துவதற்காக இதனகத்துப் பின்னர் மீறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டியதும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தற்போது என்னால் இவ்வாறு ஆக்கப்பட்டு விதிக்கப்பட்டு தாபிக்கப்படுகின்றது.*

*முதலாவது : குறியீட்டுப் பெயர் மற்றும் அறிமுகம்.- இந்தப் பதக்கம் "சேவைப் பதக்கம்" எனக் குறிக்கப்பட வேண்டும் என விதிக்கப்படுகிறது.*

*இரண்டாவது : இந்தப் பதக்கமானது உலோக தங்க ரோஜா நிறத்தில் ஒரு பக்கத்தில் 2.2 செ. மீ. நீளமான நாற்கோணி வளைவுடன் சதுரமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், இந்தப் பதக்கத்தின் முன்பக்கமாக நடுவில் இலங்கைத் தரைப்படையைப் பிரதிபலிக்கின்ற நுணிகள் மேல் நோக்கி ஒன்றுக்கொன்று குறுக்கே உள்ள இரண்டு வாள் சின்னத்துடனும் இலங்கைக் கடற்படையை பிரதிபலிக்கின்ற நங்கூரமொன்றில் அதனைச் சுற்றி சங்கிலி ஒன்றைச் சுற்றியுள்ள விதத்தில் மேல் நோக்கி உயர்ந்து இருக்கின்ற அதன் மேல் இலங்கை வான்படையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலையை இடது பக்கம் திருப்பிக் கொண்டு பறக்கும் பருந்து ஒன்றையும், அதன் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழிகளால் "சேவைப் பதக்கம்" எனும் வாசகத்தைச் செதுக்கிக் காட்டுதல் வேண்டும். பின்புறத்தின், தாமரை மலர் இதழ்களையுடைய கரையால் சூழப்பட்ட இலங்கையின் பரம்பரைக்குரிய சின்னமான சிங்கத்தின் உருவத்தையும், அதனைச் சுற்றிச் செல்லும் நெற்கதிர் அலங்காரத்தினால் மற்றும் உச்சியில் இருக்கும் தர்மசக்கரத்தினாலும், அடியில் நிறைகுடத்தினாலும், நிறைகுடத்திற்கு வலது பக்கத்தில் ஒளிக் கதிர் வீசும் சூரியனையும் இடது பக்கத்தில் சந்திரனையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சின்னத்தையும், அதன் கீழ் தாபிக்கப்பட்ட வருடமான 2009 உம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*மூன்றாவது : நாடாவின் இருபுறத்தினாலும் 0.8 செ. மீ. கடும் நீல நிறமான இரு கோடுகளையும் நடுவில் 1.5 செ. மீ. பிரகாசமான பச்சை நிறக் கோட்டையும் கொண்ட 3.1 செ. மீ. அகலத்தையும் 5. செ. மீ. நீளத்தையும் கொண்ட நடா தொங்கவிடப்படக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பதக்கத்தை இடது மார்பில் அணிய வேண்டுமென விதிக்கப்படுகிறது.*

*நான்காவது* : *தகைமைகள்.-* 2009.05.19 ஆந் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக பங்களிப்புச் செய்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஆரம்பப் பயிற்சி பாடநெறிக் காலம் தவிர்ந்த மூன்று வருடங்களுக்கு குறையாத எண்ணிக்கையான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நடத்தை மற்றும் இருப்பைக் கவனத்திற் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தரைப்படை, கடற்படை மற்றும் வான் படைகளில் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளில் அனைத்துப் பதவிகளை வகிப்பவர்களுக்கும் படைதாங்கு சேவைகளில் மூன்று வருட சேவைக் காலத்தையுடைய நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும், இதனகத்துப் பின்னர் ஆக்கப்பட்டுக் காட்டப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அமைவாக இந்த அணிவிப்பு வழங்கப்பட வேண்டுமென விதிக்கப்படுகிறது.

*ஐந்தாவது* : *பதிவுசெய்தல்.-* அதியுத்தமராம் சனாதிபதியின் அங்கீகாரத்தின் பின் பதக்கம் வழங்கப்பட்டிருக்கும் அனைவர்களினதும் பெயர்கள், சம்பந்தப்பட்ட சேவைக் கட்டளைகளில் வெளியிடப்பட வேண்டும் எனவும் உரிய படைதாங்கு சேவைப் பிரதானிகளின் கட்டளைக்கு அமைய அவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பேணப்பட வேண்டும் எனவும் விதிக்கப்படுகின்றது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாக அவ்வாறான பெயர்ப்பட்டியல் ஒன்றை பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின் கீழ் பேணப்பட வேண்டும் எனவும் கட்டளையிடப்படுகிறது.

*ஆறாவது* : *அணியும் ஒழுங்கு முறைகள்.-* பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்கு முறை காட்டப்படுகின்ற உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி பாராட்டுச் சேவை பதக்கத்திற்கு பின் இப்பாராட்டுச் சேவை பதக்கத்தை அணிய வேண்டும் என கட்டளையிடப்படுகிறது.

*ஏழாவது* : *குறுகிய வடிவம்.-* பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும், சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்றதுமான சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு, வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் கிட்டிய அரைவாசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை சேவைத் தலைமையகங்களில் வைத்திருத்தல் வேண்டும் என கட்டளையிடப்படுகின்றது.

*எட்டாவது* : *உரித்தை இழக்கச் செய்தல் மற்றும் மீள உரித்தாக்குதல்.-* இங்கு இதனகத்துப் பின்னர் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் கீழ் எவரேனுமொரு நபருக்கு அளிக்கப்பட்டுள்ள பதக்கமொன்றை இரத்துச்செய்து நிராகரிப்பதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கும் இயலும் எனவும், இருந்தும் அவ்வாறு உரித்தளிக்கப்பட்ட அளிப்பொன்றை மீண்டும் செல்லுபடியாக்கி வழங்குவதற்கும், அவர்களுக்குச் சட்டபூர்வமான அதிகாரம் உள்ளதாகவும் விதிக்கப்படுகின்றது. இரத்துச் செய்யும் அல்லது மீள வழங்கும் அறிவிப்பை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட சேவை நியதிகளில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

*ஒன்பதாவது* : *நடைமுறைப்படுத்தப்படும் திகதி.-* இந்தப் பதக்கம் 2009, மே மாதம் 19 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகிறது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி கொழும்பு சனாதிபதி மாளிகையில் வெளியிடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

**சேவைப் பதக்கம்**

*சனாதிபதி அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு விளக்கமாக சேவைப் பதக்கமளிப்பதற்கு உரித்தை இழக்கச் செய்வதற்கு மீண்டும் உரித்தளிப்பதற்கு அது தொடர்பான ஏனைய விடயங்களுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

உதய ஆர். செனெவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2019, பெப்புருவரி 21.

**சேவைப் பதக்கம்**

1. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி முதல் போருக்குப் பின்னரான செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்த இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் நடத்தை மற்றும் இருப்பைப் பற்றி திருப்தியடைகின்றவர்களும், இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி வரை செயலூக்கத்துடன் சேவையில் ஈடுபட்டிருந்த மற்றும் அதற்குப் பின்பு சேவையில் சேர்ந்த தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளில் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்தவர்களும் ஆரம்ப பயிற்சிப் பாடநெறியைத் தவிர மூன்று வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றவர்களுமான எந்தவொரு பதவிக்குரிய நபரொருவரைப் போன்று படைதாங்கு சேவைகளில் மூன்று வருடச் சேவைக் காலமுடைய நிரந்தர சிவில் ஊழியர்களும் சேவைப் பதக்கம் பெற்றுக்கொள்வதற்குத் தகைமையுடையவர்களாவார்கள்.

2. இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி தொடக்கம் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வுபெற்ற, சேவையிலிருந்து நீக்கப்பட்ட அல்லது சேவையிலிருந்து விலகிச் சென்றவர்கள் இப்பதக்கத்துக்கு உரித்தற்றவர்களாவர்.

3. இறந்தவரொருவருக்காக வழங்கப்படும் பதக்கத்தை அவரது சட்டபூர்வமான நெருங்கிய உறவினர் அல்லது அவ் உறவினரால் பெயரிடப்பட்ட நபரொருவர் பெற்றுக்கொள்ளலாம்.

4. சேவைப் பக்கத்தை வழங்குவதற்காக செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் படைத் தளபதியினால் பெயரிடப்படும் மூன்று பேருக்குக் குறையாத எண்ணிக்கையைக் கொண்ட குழுவினால் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். அக்குழுவினால் செய்யப்படும் பரிந்துரைகளை குறித்த படைத் தளபதியின் பரிந்துரைகளுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஊடாக அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்தல் வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பாகச் செய்யப்படும் பரிந்துரைகள் கட்டாயமாக பாதுகாப்புச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு பரிந்துரையுடன் பரிந்துரைக்கப்பட்ட நபரது இலக்கம், பதவி, பெயர் மற்றும் முழுப்பெயர் உட்பட ஏனைய அனைத்து விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. பதக்கம் பெற்றவர்களின் பெயர்கள் உரிய சேவை நியதிகளில் வெளியிடப்படல் வேண்டும். அப்பதக்கம் பெறுநர்கள் அனைவரினதும் பெயர்ப் பதிவேடொன்றைக் குறித்த படைத் தளபதியின் கட்டளையின்கீழ் பேணப்படுதல் வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தொடர்பாக அவ்வாறான பெயர்ப் பதிவேடொன்றைப் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின்கீழ் பேணப்படுதல் வேண்டும்.

7. இப்பதக்கம் பெற்றிருப்பவர் ஒருவர் இராணுவ நீதிமன்றத் தீர்ப்புக்கமைய அல்லது வேறு நீதிமன்றத் தீர்ப்புக்கமைய மரண தண்டனைக்கு ஆளானால், அப்போது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையிலான கட்டளையிடாவிட்டால் அப்பதக்கம் அவருக்கு உரித்தாகாது.

8. சேவைகளிலிருந்து விலக்கப்படுபவர்கள் மற்றும் நீக்கப்படுபவர்கள் அல்லது அதிகார சபையிலிருந்து விலக்குவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தாகாது.

9. அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திக்கு உள்ளாகி சேவைகளிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடும் வரை அவருக்கு வழங்கப்பட்ட பதக்கம் உரித்தாகாது.

10. இப்பதக்கத்தைப் பெற்றிருப்பவர், தேசத் துரோகம், நாட்டுப் பிளவு, கிளர்ச்சி, கோழைத்தனம், சேவையிலிருந்து விலகுதல் அல்லது இயற்கைக்கு மாறான நடத்தை போன்ற குற்றங்களுக்கு குற்றவாளியாக இருந்தால் அல்லது துர்நடத்தை காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டு அல்லது விலக்கப்பட்டு சேவை நியதியின்கீழ் இருக்கும் போது சிவில் அதிகாரிகளினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அப்போது அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தாகாது.

11. எந்தவொரு நபருக்கும் உரித்தளித்த பதக்கம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் தனது தற்றுணிவின்படி மீண்டும் உரித்தாக்கி வழங்கப்படலாம்.

12. உரித்தளித்தல் அல்லது மீண்டும் உரித்தாக்கி வழங்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது பற்றிய அறிவித்தல் சேவைக் கட்டளைகளில் வெளியிடப்படல் வேண்டும்.

13. காணாமற் போன பதக்கத்திற்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பீர்களாயின், அவ்வாறு காணாமற் போன பதக்கம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வேண்டும். அது எந்த நிலையில் காணாமல் போனது என்பது பற்றி சமாதான நீதவானினால் உறுதிப்படுத்தப்பட்ட கூற்றொன்றைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டோடு தன் கட்டளையிடும் அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவரால் அது கடித பரிவர்த்தனைகள் செய்யப்படும் சாதாரண வழி மூலம் குறித்த படைத் தளபதிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பதக்கம் காணாமல் போனது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நியாயமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டால், காணாமற் போன பதக்கத்துக்குப் பதிலாக புதிய பதக்கமொன்றைப் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

14. இவ் ஒழுங்குவிதிமுறைகளில்,

| | | |
|---|---|---|
| (அ) "சேவைகள்" என்பதில் | - | இலங்கைத் தரைப்படை<br>இலங்கைக் கடற்படை<br>இலங்கை விமானப்படை |
| (ஆ) "சேவைத் தளபதிகள்" என்பதில் | - | இராணுவத் தளபதி,<br>கடற்படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதி |
| (இ) "இராணுவ உறுப்பினர்" என்பதில் | - | இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப் படை உறுப்பினர்கள் |
| (ஈ) "சிவில் ஊழியர்கள்" என்பதில் | - | இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப் படைகளிலுள்ள சிவில் ஊழியர்கள் |
| (உ) "தரைப்படை" என்பதில் | - | இலங்கைத் தரைப்படையும் |
| (ஊ) "கடற்படை" என்பதில் | - | இலங்கைக் கடற்படையும் |
| (எ) "விமானப்படை" என்பதில் | - | இலங்கை விமானப்படையும் |

உள்ளடங்குகின்றன.

03-772/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.